
தமிழ்நாடு அரசு

# கால்நடை பராமரிப்புத் துறை,

தருமபுரி மாவட்டம்.

# "இலம்பி" தோல் நோய் (LUMPY SKIN DISEASE )

**"இலம்பி" தோல் நோய் (LUMPY SKIN DISEASE )** வைரஸ் நச்சுயிரியால் ஏற்படும் அம்மை வகையைச் சார்ந்த நோய் ஆகும். இந்நோய் பூச்சிக்கடி மூலம் பரவுகிறது. இந்நோய் தாக்கிய மாடுகளின் தோலின் மேல் கட்டிகள் தோன்றும். சில மாதங்களில் வடுக்கள் மறைந்து ரோமம் முளைத்து விடும். மாடுகள் மற்றும் மாடுகள் கட்டப்பட்டுள்ள தொழுவங்களை சுத்தமாக பராமரித்தால் பூச்சிகள் பெருகாமல் நோய் பரவுதலை தடுக்க முடியும்.



கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகள் மற்றும் சுற்றுபுறத்தை சுகாதாரமாக பராமரிப்பதன் மூலம் இந்நோய் தாக்காமலும் மற்ற கால்நடைகளுக்கு பரவாமலும் தடுக்கலாம்.

## எப்படி பரவுகிறது

1. கொசு, ஈ, உண்ணி கடி மற்றும் பாதிக்கப்பட்ட மாடு மூலமாக இந்த நோய் பரவுகிறது.
2. கோடைகால தொடக்கத்தில் இந்த நோய் அதிக அளவில் பரவுகிறது.
3. கறவையாளர்கள் மூலமாகவும் பரவ வாய்ப்புள்ளது.
4. கன்று குட்டிகள், பாதிக்கப்பட்ட மாட்டின் பாலை அருந்தும்போதும் நோய் தொற்று ஏற்படுகிறது.
5. இந்த நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மாடு வாங்கி வந்தால் அதன் மூலமாகவும் பரவுகிறது.
6. இந்த வைரஸ் கிருமியானது மாட்டின் தோல் மற்றும் காயங்களில் 18 முதல் 35 நாட்கள் வரை வாழும்.

## அறிகுறிகள்

1. கண்ணில் நீர் வடிதல் மற்றும் மூக்கில் சளி ஒழுகுதல் போன்றவை ஆரம்ப அறிகுறிகள்.
2. கடுமையான காய்ச்சல் இருக்கும்.
3. மாடுகள் சோர்வாக காணப்படும்.
4. உடல் முழுவதும் சிறு கட்டிகளாக வீக்கம் காணப்படும்.
5. இந்த கட்டியின் அகலம் 0.5–5 செ.மீ வரை இருக்கும்.
6. உருண்டையாக உள்ள கட்டிகள் உடைந்து சீழ் வெளியேறும்.
7. கால்கள் வீங்கி இருக்கும்.
8. நிணநீர் சுரப்பிகள் பெரியதாக காணப்படும்.

## நோய்த்தொற்றின் பாதிப்புகள்

1. இந்த நோய் தொற்று 60% மாடுகளை பாதிக்கும்.
2. பால் உற்பத்தி குறையும்.
3. சினை பிடிப்பதில் பாதிப்புகள் ஏற்படும்.
4. தீவனம் சரியாக உட்கொள்ளாததால் உடல் எடை குறைந்து காணப்படும்.
5. காயங்களால் மாட்டின் தோல் முற்றிலும் பாதிப்படையும்.
6. இளம் சினைமாடுகளில் கருச்சிதைவு ஏற்படவாய்ப்புள்ளது.
7. சில மாடுகளில் மடிநோய் ஏற்படவும் வாய்ப்புள்ளது.
8. அதிக அளவில் நோய்தொற்று ஏற்பட்டாலும் இறப்பு சதவிகிதம் மிக குறைவு.